24th July 1964]

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR : (a) The Government have no scheme for the setting up of a Sanctuary for lions in this State.

(b) Does not arise.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, மைசூரிலிருந்து சிங்கம் கொண்டு வந்து நம்முடைய மாநிலத்தில் வளர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மைசூரில் சிங்கங்கள் கிடையாது.

கனம் சபாநாயகர் : அங்கு இருக்கிற ஸூவில் இருக்குமல்லவா ? (சிரிப்பு.)

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நிலம் வழங்குதல்

** 698 கேள்வி.*—**திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுக்கா, புதுப்பட்டு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நிலம் வழங்குவதற்காக ஒதுக்கப் பட்ட நிலம் எவ்வளவு ?

(இ) அந்நிலங்களை பயிரிடுபவர்களுக்கு அவற்றை பட்டா செய்து கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) 29·06 acres.

(b) Yes.

திரு. ஆ. கு. சுப்பையா : ஹரிஜனங்களுக்கு சர்க்கார் நிலங்களை வழங்குவது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நிலம் இல்லாத ஏழைகள் என்ற அடிப்படையில்.

திரு. ஆ. கு. சுப்பையா : நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங் களுக்கு சர்க்காருடைய நிலங்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. அந்த நிலங்களுக்கு மதிப்பீடு வைத்து, அந்த மதிப்பீட்டுத் தொகையை கொடுக்கவேண்டும் என்று சொல்லு கிறார்கள். இதை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் தனியாக எழுதி அனுப்பினால் இதில் இருக்கக்கூடிய நிலையை அறிந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு ஒரு எக்கர் நிலம் கொடுப்பதற்குக்கூட, வீட்டு மனைக்கு 3 செண்டு, 4 செண்டு நிலம் கொடுப்பதற்குக் கூட இப்பொழுது 10 வருஷங்

களுக்கு 'தடை' போட்டிருக்கிறுர்கள். ஹரிஜனங்களைப் பொறுத்த வரையிலாவது, அந்தத் தடையை நீக்குவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : நீலகிரி ஜில்லாவில் பொதுவாக நில விநியோகம் தாராளமாகச் செய்வதற்கு தடை இருக்கிறது. காரணம் அங்கு இருக்கக்கூடிய நிலங்களை பல காரியங்களுக்கு பயன்படுத்தவேண்டியிருக்கிறது. அதோடு இல்லாமல், நிலம் விநியோகம் செய்வதிலே, அங்கே நாம் ஏற்படுத்தியிருக்கிற பெரிய அணைக்கட்டுகள் மண்மேடிட்டுப் போய்விடுமோ என்ற அச்சமும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே, ஏதேனும் விசேஷமாக சலுகை காட்டவேண்டும் என்ற ஒரு நிலைமை இருக்குமானல், தனிப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்திற்கு வந்தால், அவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. அ. துரையரசன் : ஹரிஜனங்களுக்கு புறம்போக்கு நிலங்களை கொடுப்பதிலே சில ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் போட்டுத் தருவதற்கு மறுக்கிறுர்கள். ஏற்கெனவே சாகுபடி செய்துகொண்டு, குடியிருந்து வருகிற நிலங்களிலிருந்து அப்புறப் படுத்துவதற்காக மிரட்டப்படுகிறுர்கள். இது சம்பந்தமாக இரண்டு தினங்களுக்கு முன் நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களை நான் சந்தித்து, ஒரு தந்தியின் நகலைக் கொடுத்தேன். இதை துரிதமாகக் கவனிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் ஒரு தாக்கீது அனுப்புமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இவ்வளவு சிரமம் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஏதேனும் சிக்கல் இருக்கும்பட்சத்தில், ஒவ்வொரு ஜில்லாவிலும், ஹரிஜன நல இலாகாவுக்கு என்று ஒரு விசேஷ அதிகாரி இருக்கிறுர். அவரிடம் இருக்கக்கூடிய கஷ்டத்தைச் சொல்லும்பட்சத்தில், அவர் பரிசீலனை செய்து, அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை அவர் நிச்சயம் எடுப்பார்.

திரு. தா. சின்னசாமி : தலைவர் அவர்களே, நில அடமான பவர் உள்ள கோட்டாட்சித் தலைவர்கள் அங்குள்ள சொந்தக்காரர்களுக்கும், அதே நேரத்தில் அவர்களுடைய ஜில்லாவை சேர்ந்தவர்களுக்கும் நில அடமானம் செய்துவிடுகின்றுர்கள். ஹரிஜனங்கள் நில அடமானத்திற்கு விண்ணப்பம் கொடுத்தும் செய்யவில்லை. மேல் ராயப்பனூரில் 119 ஏக்கர் நிலங்கள் இதர ஜில்லாக்காரர்களுக்கு அடமானம் செய்ததை ரத்து செய்ததையும் குறித்து நமது கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் தனியாக எழுதி அனுப்பினேன். இதுவரையிலும் அரசாங்கம் ஏழை ஹரிஜனங்களுக்கோ, ஏழைக் குடியானவர்களுக்கோ நிலம் கொடுக்காததன் காரணம் என்னவென்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த விவரம் என்னிடம் இல்லை. தனியாக ஒரு கேள்வியோ அல்லது மீண்டும் ஒரு கடிதமோ எனக்கு எழுதி அனுப்பினல், அதில் இருக்கக்கூடிய நிலையை தெரிந்துகொண்டு சொல்ல முடியும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.